**கார்ப்பரேட் ஆகும் விவசாயம்!**

கலக்கும் புரொபஷனல்கள்

நாணயம் விகடன்




**வி**வசாய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஆபீஸில் பியூன் வேலை கிடைத்தாலும் அடித்துப் பிடித்து ஓடியது அந்தக் காலம் . லட்ச ரூபாய் சம்பளம் தரும் ஐ .டி. வேலையைக்கூட அசால்ட்டாக விட்டுவிட்டு விவசாயம் செய்ய ஓடி வருவது இந்தக் காலம் . டாக்டர்கள், என்ஜினீயர்கள், கலைஞர்கள், ஃபைனான்ஸ் துறை ஆகியவற்றைச் சார்ந்தவர்கள் என பலரும் இன்றைக்கு விவசாயம் செய்ய கிராமங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். முழுநேரமாக விவசாயத்தில் ஈடுபட முடியாத பிஸினஸ்மேன்கள் ' வீக் எண்ட் ' விவசாயிகளாகி, சைடு வருமானமாக பல லட்சங்களை சம்பாதிக்கிறார்கள். ஆக, விவசாயத்தை விட்டொழிக்க என்று நினைத்தவர்களின் இன்றைய பெஸ்ட் சாய்ஸ் விவசாயமாக மாறிவிட்டது. பெரிய பெரிய படிப்புகளை எல்லாம் படித்து விட்டு இன்றைக்கு விவசாயத்தில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் சிலரை பற்றி இனி:

## பிஸியோதெரபி டு ஆடு வளர்ப்பு!



டாக்டர் படிப்பு , பந்தாவான வாழ்க்கை , கையைப் பிடித்தோமா ஓரளவுக்குப் பையை நிரப்பினோமா என சொகுசான வாழ்க்கையை வாழ்ந்து முடித்திருக்கலாம் விழுப்புரம் மாவட்டம் , திருநந்திபுரத்தைச் சேர்ந்த வெங்கடேசன். காரணம், அவர் படித்தது பிசியோதெரபி . ஏறக்குறைய அரை டாக்டர் . அப்படிப்பட்ட வேலையை உதறிவிட்டு, கலப்பின ஆடு வளர்ப்பில் கலக்கி எடுத்துக் கொண்டிருக்கிறார் . ம்மேம், ம்மே என ஆடுகள் விதவிதமாக கத்திக் கொண்டிருக்க, உற்சாகமாக பேச ஆரம்பித்தார் அவர்.

"பிசியோதெரபி முடிச்சிட்டு , வேலை பார்த்தப்ப மாதம் 20 ஆயிரம், 30 ஆயிரம் வருமானம் வந்துச்சு . இதைவிட அதிகமா சம்பாதிக்கிறதுக்கு என்ன செய்யலாம்னு யோசனை செய்தப்பதான் ஆடு வளர்ப்பு பத்தி தெரிஞ்சுகிட்டேன் . அது சம்பந்தமான விஷயங்களைத் தேடிப் பிடிச்சு படிச்சேன் . உடனே 100 தலைச்சேரி பெட்டையும், 2 போயர் கிடா, 18 போயர் பெட்டைன்னு மொத்தம்

25 லட்சம் ரூபாய் முதலீட்டில் ஆட்டுப்பண்ணை ஆரம்பிச்சேன் . இப்ப எங்கிட்ட மொத்தம் 236 ஆடுகள் இருக்கு" - சில ஆண்டுகளிலேயே அவர் கண்ட வளர்ச்சியை பெருமை பொங்க எடுத்துச் சொன்னார் வெங்கடேசன்.

வளர்ப்பது ஆடு என்றாலும் கம்ப்யூட்டரும் கையுமாகத்தான் இருக்கிறார் இவர் . தான் வளர்த்து வரும் ஆடுகள் பற்றிய அனைத்து தகவல்களையும் இந்த கம்ப்யூட்டரில் போட்டு வைத்திருக்கிறார்.

"கொட்டில் முறையிலதான் ஆடு வளர்க்கிறேன் . தாய் ஆடு , குட்டியாடு, சினையாடுன்னு எங்கிட்ட இருக்கிற ஆடுகளை மொத்தம் ஏழு வகையா பிரிச்சி வளர்க்கிறேன் . 150 தாய் ஆடுகள் மூலமா ... ரெண்டு வருஷத்துக்கு ஒரு தடவை, சராசரியா 900 குட்டிங்க கிடைக்குது . வருஷத்துக்கு சராசரியா 450 குட்டிகள் விற்பனை செய்றேன் . ஆறு மாதம் வளர்ந்த ஆட்டை உயிர் எடைக்கு கிலோ 250 ரூபாய்னு விக்கிறேன் " என்று தன் பிசினஸ் பற்றி புட்டு புட்டு வைக்கிறார் வெங்கடேசன்.

ஆடு வளர்ப்பில் உங்களுக்கு அப்படி என்ன லாபம் கிடைத்து விடும் என்று தெரியாத்தனமாக கேட்டுவிட்டோம். "சராசரியா ஒரு ஆட்டுக்கு 5,000 ரூபாய்னு வச்சிக்கிட்டாலே வருஷத்துக்கு 22 லட்சத்து

50 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைச்சுடுது. பராமரிப்பு, அடர் தீவனம், சம்பளம்னு எல்லாச் செலவும் போக வருஷத்துக்கு 16 லட்ச ரூபாய் அளவுக்கு லாபம் கிடைக்குது. ரெண்டு வருஷத்துல முதலீடு கைக்கு வர்றதோட, லாபமும் வர ஆரம்பிச்சுடும். ஆடு வளர்ப்புல இறங்கினா, முதலீட்டுக்கேத்த அளவுக்கு கண்டிப்பா வருமானத்தைப் பார்க்க முடியும்" என்று சொல்லிவிட்டு, ஆடுகளுக்குத் தண்ணீர் வைக்க புறப்பட்டார் வெங்கடேசன்.

## ஹெச்.ஆர். டு எண்ணெய் தயாரிப்பு!



பி.டெக்., எம்.பி.ஏ. என்று படித்துவிட்டு, சென்னையில் உள்ள பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் மனிதவளத் துறையில் அதிகாரியாக மாதம் 40ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார் சாந்தி. அந்த வேலையை உதறித் தள்ளி விட்டு தனது குடும்பத் தொழிலான ஆயில் மில்லை வெற்றிகரமாக நடத்துகிறார் அவர்.

திருப்பூர் மாவட்டம் முத்தூர் பகுதியைச் சேர்ந்த சாந்தியை சந்தித்தோம்.

ஹெச்.ஆர். டு எண்ணெய் தயாரிப்புக்கு வந்த கதையைச் சொல்ல ஆரம்பித்தார். "எங்க குடும்பத்திற்குச் சொந்தமான ஆயில் மில் இது. இங்கு எள் எண்ணெய் என்று சொல்லக்கூடிய நல்லெண்ணெய் உற்பத்தி செய்து வர்றோம். அப்பாதான் மில்லை பார்த்துகிட்டார். கவலை இல்லாமல் படிச்சு பட்டம் வாங்கினேன். பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் சென்னை கிளையில் மனிதவள துறையில் அதிகாரியா வேலை. மாதம் 40ஆயிரம் ரூபாய் சம்பளம். திருமணமும் ஆனது. கணவருக்கும் இதே துறையில்தான் வேலை. கொஞ்ச நாளில் வெளிநாட்டில் போய் நிரந்தரமா செட்டிலாகும் யோசனை எங்களுக்கு இருந்தது. அதற்கான ஆயத்தமும் நடந்துச்சு.

ஆனால், ஆயில் மில்லை நடத்திக் கொண்டிருந்த என்னோட அப்பா திடீர்னு இறந்திட்டார். கூட பிறந்தவங்க பொண்ணுகதான் மூணு பேரு. அவுங்க வெளியூர்ல செட்டிலாகிட்டாங்க. கடைசி பொண்ணான நானே ஆயில் மில்லை நடத்த வேண்டிய சூழல். அப்பா நடத்தின மில்லை விற்கவும் மனசில்லை. நானே மில்லை நடத்திட முடிவு செய்தேன்" - சாந்தி பேசப் பேச அவர் மனஉறுதி தெரிந்தது.

"எம்.பி.ஏ. படிப்பு கொடுத்த ஊக்கம் நிர்வாகத்தை நானே கையில் எடுத்து நடத்த ஆரம்பிச்சேன். மூட்டை மூட்டையா எள் வாங்கி அதை செக்கில் போட்டு ஆட்டி டின்களில் அடைச்சுதான் கடை கடையா கொண்டு போய் விற்பனை செய்து வந்தார் அப்பா. நான் நிர்வாகத்தைக் கையில் எடுத்த பின்பு, எம்.பி.ஏ. படிப்பு என்னை மாற்றி யோசிக்க வைத்தது. அப்பாவின் பழைய வாடிக்கையாளர்களுக்கு வழக்கம் போல் டின் எண்ணெய் கொடுத்து வந்தோம். அது ஓரளவு வருமானத்தைதான் கொடுத்தது. இன்று காலம் மாறிவிட்டது.

வியாபார யுக்திகளையும் மாற்ற வேண்டும் என்று முடிவு செய்தேன். எங்கள் எண்ணெய்யின் தரத்திற்காகவே, பரவலான வாடிக்கையாளர்களைப் பெற்றிருந்தோம். வியாபாரத்தைப் பெருக்க வேண்டும். அதற்கு வாடிக்கையாளர்களை அதிகரிக்க வேண்டும். புதிய வாடிக்கையா ளர்களை ஈர்க்க ஒரே வழி மில்லை நவீனமாக்கினேன். தரத்திற்கு நான் முக்கியத்துவம் தந்ததால்தான் என்னால் பிஸினஸில் ஜெயிக்க முடிந்தது" என்றார் சாந்தி.